## Deposition of Witness

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**In the Court of Judicial Magistrate No.III Cuddalore.**

Case Number : S.T.C. 485 / 2014
Police Station : Thiruppapuliyur- P.S
Deposition of witness for Prosecution: LW8 / PW9
Name : மு. நல்லதம்பி - மோட்டார் வாகன ஆய்வாளர்
Father Name/Husband Name : முத்துசாமி
Cuddalore :
Taluk :
Caste :
Calling :
Religion :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 25.08.2023 நாளாகிய இன்று திரு. ஜி. இரகோத்தமன், M.A.,L.L.M., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதன்மை விசாரணை:**</u>

**01.** நான் தற்போது ஆலங்குடி பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–1 ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் பணியில் இருந்த போது கடந்த 08.01.2013 அன்று மாலை 04.05 மணியளவில் திருப்பாப்புலியூர் காவல் உதவி ஆய்வாளரின் வேண்டுகோளின் படி குற்ற எண்.859/2012, இ. த.ச பிரிவுகள் 279, 337 ன் படி PY–01–P–6283 என்ற இருசக்கர வாகனத்தை அதே தினம் 04.10 மணியளவில் எனது அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன்.

**02.** ஆய்வில் ஓட்டுநர் உரிமம், நடப்பு காப்பு சான்று ஆய்வு செய்தேன். வண்டிக்கு எந்த சேதாரமும் இல்லை. வாகனத்தின் முன்புற மற்றும் பின்புற Brake System நல்ல நிலையில் இருந்தது. Steering நல்ல நிலையில் இருந்தது. மேலும் இந்த விபத்து எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்றளித்தேன். **(08.01.2013 தேதியிட்ட PY–01–P–6283 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**03.** அதே குற்ற எண்ணில் 20.12.2012 மாலை சுமார் 04.00 மணியளவில் மேற்கண்ட காவல் நிலைய ஆய்வாளரிடமிருந்து TN–32–N–2254 என்ற கனரக பயணிகள் பேருந்தை அதே தினம் 04.15 மணியளவில் என் அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஓட்டுநர் உரிமம், தகுதி சான்று, அனுமதி சான்று, நடப்பில் இருந்தன. வாகனத்தில் எந்த

சேதாரமும் இல்லை. வாகனத்தின் கால்தடை திறன் 64% ஆகவும், கைத்தடை திறன் செயலிலும் இருந்தன. வாகனத்தின் சுற்றான் நல்ல நிலையில் இருந்தன. இந்த விபத்தானது எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்று சான்று வழங்கினேன். **( 20.12.2012 தேதியிட்ட TN-32-N-2254 என்ற கனரக பயணிகள் பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

04. சம்பவ இடம் சென்று நான் ஆய்வு செய்யவில்லை. அலவலகத்தில் தான் ஆய்வு செய்தேன். விபத்து நடந்த தேதிக்கும், நான் ஆய்வு செய்வதற்கும் இடையே வாகனத்தை ரிப்பேர் பார்த்து என்னிடம் ஆய்வுக்கு அனுப்ப வாய்ப்பு உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me Certified that contains a true and correct statement made by the Accused read over and admitted by the / him to the correct.

Sd- G. Ragothaman, M.A.L.L.M.,
Judicial Magistrate No.III,
Cuddalore.